# *இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்கள்*

***அம்பிகை நந்தகுமரன்[1], வை. எம். அஷ்ரப்[2]***

*[1]தமிழ்த்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*[2]கல்/கல்முனை அல்-அஷ்ரக் ம.ம.வி (தே.பா), நிந்தவுர்.*
*selvampikai@gmail.com,ymashraff@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*உலகின் பல்வேறு மொழிகளில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழ்நிலையில் பாரிய காவியங்கள் தோன்றியுள்ளதை உலக இலக்கிய வரலாறுகள் காட்டுகின்றன. தமிழ் இலக்கிய மரபிலும் காவிய வடிவம் முக்கியமான ஒன்றாகவுள்ளது. சோழர் காலத்தைத் தமிழின் 'காவிய காலம்' என இலக்கிய வரலாற்றாசிரியர்கள் அழைப்பர். நிலப்பிரபுத்துவத்தின் உச்ச நிலையில் தோன்றிய காவியம் அச்சமுதாய அமைப்பின் நலிவோடு மறைந்துபோன இலக்கிய வடிவமாக மாறியது.பழைய காவிய வடிவத்திலிருந்து பெரிதும் வேறுபட்டதாக இருபதாம் நூற்றாண்டுக்கே உரிய புதிய காவிய வடிவமொன்று தோன்றி வளர்ச்சியடைகின்றது. நவீன காவிய மரபு பாரதியுடனேயே ஆரம்பிக்கின்றது எனலாம். இவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும்,ஈழத்திலும் நவீன காவிய மரபின் வளர்ச்சியைக் காணலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான கவிஞர்களின் நவீன காவியங்கள் கற்பனை உலகு சார்ந்தவையாகவே அமைகின்றன. ஈழத்துக் கவிஞர்களின் நவீன காவியப் படைப்புக்கள், நவீன வாழ்க்கை பற்றிய உணர்வினைத் தமது அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் பதிய தன்மைகளைப் பெற்றுள்ளன. சமூகப் பிரச்சினைகளே அவற்றின் பொருளாக உள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரை ஈழக் கவிஞர்கள் பலர் நவீன காவியத்தைச் சமூகப் பிரச்சினைகளைப் பதிவுசெய்வதற்கான வடிவமாகக் கையாண்டுள்ளனர்.இந்த வரிசையிலே பாலமுனை பாறூக்கின் 'தோட்டுப்பாய் மூத்தம்மா' சமூகப் பிரச்சினை ஒன்றை முன்வைக்கும் நவீன காவிய வடிவமாக உருவாகியுள்ளது. பொருத்தமற்ற திருமண முயற்சியினால் குடும்பப் பெண்ணுக்கு ஏற்படும் மனப் போராட்டங்கள், விவாகரத்து, மகிழ்ச்சியான மறுமணவாழ்வு, கணவனின் மறைவு அநாதரவான நிலையில் வாழ்ந்து இறத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகஇந் நவீன காவியம் அமைகின்றது. எனினும் இந்த நவீன காவியம் சமூகப் பிரச்சினைகளை மட்டும் பேசாமல் முஸ்லீம் மக்களின் பண்பாட்டுக் கோலங்களைப் பதிவுசெய்வதாகவும் காணப்படுகின்கிறது.அந்த வகையில் இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் என்ற தலைப்பில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது. குறித்த காலப்பகுதியில் இலங்கை முஸ்லீம்களின் மத்தியில் வழக்கிலிருந்த பண்பாட்டுக் கோலங்களை இந்த நவீன காவியம் ஆவணப்படுத்தியுள்ளது. எனினும் இதில் கூறப்பட்ட சில சடங்குகள் இக்காலத்தில் வழக்கத்தில் இல்லை என்றே கூறலாம். எனவே இந் நவீன காவியத்தின் வழி இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்களை இனங்காண்பதோடு இன்று வழக்கிழந்துபோன சடங்குகளின் காரணங்களையும் தேடுவதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இஸ்லாமிய மக்களின் பிறப்பு முதல் இறப்புவரையான சடங்குகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வில் விவரண ஆய்வு, பகுப்பாய்வு என இருவகையான ஆய்வுநெறிகள் பின்பற்றப்படுகின்றன. இந்த ஆய்வின்மூலம் இஸ்லாமியப் பண்பாட்டுக் கோலங்கள் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

***திறவுச் சொற்கள்:****பண்பாட்டுக் கோலங்கள், இஸ்லாமியர், சடங்கு, நவீன காவியம், சமூகம்*

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமியரின் பங்கும் பணியும் விதந்து போற்றத்தக்கன. தமிழை வளர்த்து வளம்படுத்தியவர்கள் மட்டுமல்லாது குறிப்பிட்ட காலகட்டத்தில் தமிழை அழிவினின்றும் தடுத்துக் காத்தவர்களும் இஸ்லாமியர்கள். இஸ்லாமியர்கள் தமிழைத் தாய்மொழியாக ஏற்றுக்கொண்ட பின்னர் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றைச் செய்யவேண்டுமென ஆர்வம் கொண்டனர். இஸ்லாமியப் புலவர்கள் தமிழ் இலக்கண மரபினை ஏற்றுக்கொண்டு காப்பியம், சிற்றிலக்கியம் முதலான இலக்கிய வடிவங்களை ஆக்கினார். தமிழிலக்கணப் பிரபந்தங்கள் மட்டுமன்றி இஸ்லாமியருக்குரியதான படைப்போர், நாமா, கிஸ்லா, மஸலா முதலான புதிய சிற்றிலக்கியங்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்தனர்.

மரபான இலக்கிய வடிவங்களுக்கு மட்டுமன்றி நவீன இலக்கியத்திற்கும் இஸ்லாமியர் பணிபுரிந்துள்ளனர். இஸ்லாமிய மக்களின் வாழ்வியல் கோலங்களையும் சமூகப் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு நவீன இலக்கிய வடிவங்கள் பல தோன்றியுள்ளன. அந்த வகையிலே இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் பாலமுனை பாறூக் குறிப்பிடத்தக்கவர். நவீன இலக்கியங்களின் வரிசையிலே கவிதைகளையும், நவீன காவியங்களையும், குறும்பாக்களையும் தந்தவராக இவர் அமைகின்றார். அவரது ஆக்கங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

1. பதம் ( கவிதைத் தொகுப்பு) – 1987
2. சந்தனப் பொய்கை (கவிதைத் தொகுப்பு) – 2009
3. கொந்தளிப்பு (நவீன காவியம்) – 2010
4. தோட்டுப்பாய் மூத்தம்மா (நவீன காவியம்) – 2011
5. எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (நவீன காவியம்) - 2012
6. பாலமுனை பாறூக்கின் குறும்பாக்கள் (குறும்பா) – 2012

இவர் தனது படைப்புகளின் மூலம் சமூக மாற்றத்தை விழைபவராக உள்ளதை அறியமுடிகிறது. இவரது தமிழறிவும், இலக்கண இலக்கியப் புலமையும் இவரின் படைப்புக்கள் மூலம் வெளிப்பட்டு நிற்கின்றது. இவரது நவீன காவியங்கள் முஸ்லீம் மக்களின் சமூகப் பிரச்சினைகள், அரசியல் நெருக்கடிகள், பண்பாட்டு மாற்றங்கள் ஆகிய பலவற்றையும் அழகான ஓவியங்களாகப் பதிவு செய்துள்ளன.

இந்த வகையில் பாலமுனை பாறூக்கின் தோட்டுப்பாய் மூத்தம்மா சமூகப் பிரச்சினை ஒன்றை முன்வைக்கும் நவீன காவிய வடிவமாக உருவாகியுள்ளது. பொருத்தமற்ற திருமண முயற்சியினால் முஸ்லீம் குடும்பப் பெண்ணுக்கு ஏற்பட்ட மனப்போராட்டங்கள், விவாகரத்து, மகிழ்ச்சியான மறுமணவாழ்வு, கணவனின் மறைவு, அநாதரவான நிலையில் வாழ்ந்து இறத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இந் நவீன காவியம் அமைகின்றது. எனினும் இந் நவீன காவியம் சமூகப் பிரச்சினைகளை மட்டும் பேசாமல் முஸ்லீம் மக்களின் பண்பாட்டுக் கோலங்களையும் பதிவு செய்வதாகவும் காணப்படுகின்றது.

இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்களைத் தோட்டுப்பாய் மூத்தம்மா எனும் நவீன காவியத்தின் வழியான தேடலாக இந்த ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதியில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த முஸ்லீம் மக்களின் மத்தியிலிருந்த பண்பாட்டுக் கோலங்களை இந் நவீன காவியம் ஆவணப்படுத்தியுள்ளது. சிறப்பாக முஸ்லீம் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியற் சடங்குகள் இந் நவீன காவியத்தில் பதிவுபெற்றுள்ளன. எனினும் இதில் கூறப்பட்ட வாழ்வியற் சடங்குகள் பல இன்றைய காலத்தில் வழக்கத்தில் இல்லை என்றே கூறலாம். இதற்கான காரணங்களையும் தெளிவுபெறும் நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பண்பாடு**

பண்பாடு என்ற சொல் பண்படுத்தல் என்ற சொல்லிலிருந்து உருவானது. அதாவது பண்பு படுத்தப்பட்ட அல்லது பண்பட்ட அல்லது திருத்தத்திற்குள்ளாகிய ஒரு சமூகத்தின் வழக்கங்களைக் குறிக்கும். ஆங்கிலத்தில் கல்சர் (ஊரடவரசந) என்ற சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. பண்பாடு என்ற சொல் பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகவே காணப்படுகின்றது. மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாட்டு முறைகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கின்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பண்பாடு பற்றிக் குறிப்பிடுகையில்

''பண்பாடு என்பது உண்மையில் மானுடவியல், சமூகவியல்
நிலைப்பட்ட ஒரு வாழ்வியற் களம். அன்றாட வாழ்க்கை
உறவுமுறைகள், விவாகம், பிள்ளை வளர்ப்பு, மரணம்,
உணவுவகை, ஆடைஆபரணங்கள், வைபோகம், சடங்கு
இவற்றினூடாகத் தோன்றுகின்ற ஒரு மனநிலை''

என்று குறிக்கின்றார். பண்பாடு பற்றி பல அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை வழங்கிச் செழுமைப்படுத்தியுள்ளனர். இவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் பெருமளவு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டைக் குறிப்பதற்கு பண்பு, சால்பு என்னும் சொற்களைக் கையாண்டுள்ளனர்.

''பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'' (கலி. 133)

''பண்புடையார் பட்டுண்டு உலகம் '' (குறள். 996)

''சிறப்புடைச் செங்கண் புகைய வோர்
தோல் கொண்டு மறைக்கும் சால்புடையோனே'' (புறம். 311)

''கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு'' (குறள். 994)

உலகில் பரந்துபட்டு வாழும் மனித இனங்கள் தமக்கே உரியதான பண்பாடுகளைக் கொண்டு வாழ்கின்றனர். உலகமயமாதல் சூழ்நிலையில் ஒற்றைப் பண்பாடு நிலவுவது என்பது கேள்விக்குரியது. இன்று உலகப் பண்பாடு என்பது பல்லினப் பண்பாடுகளின் கூட்டுத் தொகுதியாகும். உலகில் பரந்துபட்டு வாழும் இஸ்லாமியருக்கும் தனித்துவமான சில பண்பாடுகள் உள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் கிழக்கிலங்கை வாழ் முஸ' லீம' கள' தமக்கே உரிய பண்பாடுகளைக் கொண்டு விளங்குகின்றனர்.

அந்த வகையில் பாலமுனை பாறூக்கின் தோட்டுப்பாய் மூத்தம்மா என்னும் நவீன காவியம் பல ஆண்டு காலங்களாக உருவாகிவந்த முஸ்லீம் பண்பாட்டு வாழ்வியலை அதில் பெண் பெற்றிருந்த பங்கை அவளது வாழ்வியலைப் பதிவுசெய்யும் நோக்கில் எழுந்துள்ளது. இந் நவீன காவியத்தின் பதிவுசெய்யப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு உரியன. இன்று அவற்றுள் பெரும்பான்மையான சடங்கு முறைகள் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம்களால் கைக்கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

**மரபான காவியக் கட்டமைப்பு**

காவியங்கள் பல மொழிகளில் தோன்றியுள்ளன. தமிழிலக்கியத்தில் முழுமையான காப்பியங்கள் என்று தகுதிபெற்றனவாகக் கருதப்படுவன தண்டியலங்காரத்தில் குறிப்பிடப்படும் காப்பிய இலக்கணங்களைக் கொண்டே தோன்றியுள்ளன. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உணர்த்தல் என்பனவற்றுள் ஒன்றினைக் கொண்டு ஆரம்பித்தல்.
2. மக்கள் பின்பற்றக் கூடியதாக அறம், பொருள், இன்பம், வீடு என நூற்பயன் அமைதல்.
3. இயற்கை வருணனை இடம்பெறுதல்
4. தன்னிகரில்லாத் தலைவன்
5. அத்தகைய தலைவனுடைய குடிமரபு, பிறப்பு, இளமை, திருமணம், பூம்பொழில், நுகர்தல், புனல் விளையாடல், காதல், ஊடல், மகப்பேறு, முடிசூட்டல், ஆட்சி, அரசியல் தொடர்பு, போர், வெற்றி முதலியவை பற்றிய வருணனை.
6. சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், படலம் என ஒன்றினால் பகுக்கப்பட்டிருத்தல்.
7. பல்சுவை மெய்ப்பாடுகளும் மிளிர்வதாக அமைதல்.

மேற்குறித்த காவிய இலக்கணங்களை உள்வாங்கியும் இஸ்லாமிய சமய நெறியினை அனுசரித்தும் இஸ்லாமியக் காப்பியங்கள் பல தோன்றின.

**நவீன காவியம்**

நிலப் பிரபுத்துவமும் அரசும் உச்சநிலையிலிருந்த சோழர் காலத்தில்தான் தமிழ் மொழியில் பெருங் காப்பியங்கள் தோன்றியுள்ளன. சோழர்காலத்தைக் 'காவிய காலம்' எனச் சிறப்பித்துக் கூறுமளவுக்கு அதிக காப்பியங்கள் தோன்றிய காலமாக சோழர்காலம் அமைகின்றது. நிலப் பிரபுத்துவத்தின் உச்சநிலையில் தோன்றிய காவியம் அச் சமுதாய அமைப்பின் நலிவோடு மறைந்துபோன இலக்கிய வடிவமாக மாறியது.

எனினும் காலமாறுதல்களினால் முன்பிருந்த இலக்கிய வடிவங்கள் வழக்கிழப்பதும் சில இலக்கிய வடிவங்கள் மாற்றமடைவதும் இயல்பானது. காவியத்தைப் பெறுத்தவரையில் பழையா காவிய வடிவத்திலிருந்து வேறுபட்டதாக இருபதாம் நூற்றாண்டுக்கே உரிய புதிய காவிய வடிவமொன்று தோன்றி வளர்ச்சியடைகின்றது. 'நவீன இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படும் பாரதியுடனேயே நவீன காவிய மரபு ஆரம்பிக்கின்றது எனலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு ஆகிய இரண்டும் நவீன காவியத்தின் ஆரம்பமுயற்சி எனலாம். இவரைத் தொடர்ந்து பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, சுத்தானந்தபாரதியார், கண்ணதாசன் போன்ற பலர் அநேக நவீன காவியத்தைப் படைத்துள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான கவிஞர்களின் நவீன காவியங்கள் கற்பனை உலகு சார்ந்தவையாகவே அமைகின்றன. கற்பனை உலகு சார்ந்த செய்திகளையே காவியம் பாடலாம் என்ற மரபான சிந்தனைப்போக்கே நீண்டகாலம் நவீன கவிஞர்கள் மத்தியிலும் நிலவிவந்துள்ளது. காலமாறுதல்களினால் நவீன கவிஞர்களின் சிந்தனைப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் நவீன காவியத்தின் கருப்பொருளினையும் மாற்றி அமைத்தன.

ஈழத்துக் கவிஞர்களின் நவீன காவியப்படைப்புக்கள் நவீன வாழ்க்கை பற்றிய உணர்வினைத் தமது கருப்பொருளாகக் கொண்டிருப்பதுடன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதிய தன்மைகளைப் பெற்றுள்ளன. சமூகப் பிரச்சினைகளே அவற்றின் பொருளாக உள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரையில் ஈழக்கவிஞர்கள் பலர் நவீன காவியத்தை சமூகப் பிரச்சினைகளைப் பதிவு செய்வதற்கான வடிவமாகக் கையாண்டுள்ளனர். இவ்வகையில் மஹாகவி, முருகையன், நீலவாணன், எஸ். பொன்னுத்துரை, மு. பொன்னம்பலம், வ. ஐ. ச. ஜெயபாலன் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் வரிசையில் பாலமுனை பாறூக் தோட்டுப்பாய் மூத்தம்மா என்னும் நவீன காவியத்தைப் படைத்துள்ளார். பொருத்தமற்ற திருமண முயற்சியினால் முஸ்லீம் பெண்ணான செய்னம்புவுக்கு ஏற்படும் மனப் போராட்டங்களும் விவாகரத்தும், மறுமண வாழ்வும், அவளது மரணமும் இந் நவீன காவியத்தின் உள்ளடக்கமாகின்றது.

**தோட்டுப்பாய் மூத்தம்மாவின் இஸ்லாமியப் பண்பாட்டுக் கோலங்கள்.**

பாலமுனை பாறூக்கின் நோக்கம் குடும்பப் பிரச்சினைகளில் ஒன்றைப்பற்றிப் பேசுவது மட்டுமன்றி முஸ்லீம் மக்களது பண்பாட்டுக் கோலங்களையும் பதிவுசெய்தல் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நவீன காவியத்தின் வழியாகப் பெறப்படும் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம்களின் பண்பாட்டுக் கோலத்தினை மேல்வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

**பெரியபிள்ளைச் சடங்கு 43 – 46**

- ❖ பெரியபிள்ளையானதும் அக்கம்பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிவித்தல்.
- ❖ பிட்டோடு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து கொடுத்தல்.
- ❖ நாட்டுக்கோழி முட்டையை உடைத்து குடிக்கக் கொடுத்தல்.
- ❖ பிட்டில் நல்லெண்ணெய் விட்டு முதுகு, இடுப்புப் பகுதிகளில் ஒத்தனம் இடுதல் (ஒத்தடம்)
- ❖ சம்பந்தக்காரர்கள் சாணக் கூறையை வழங்கி பெண்ணை உறுதிப்படுத்துதல்.
- ❖ மஞ்சள் அரைத்து உடலெல்லாம் பூசுதல்.
- ❖ கவிபடித்தல்.

**திருமணச் சடங்கு 52 – 56, 62 – 71**

- ❖ கலியாணத்திற்காக வீட்டுவளவினுள் இருக்கும் தென்னைமரத்திலிருந்து தேங்காய் பறித்து, எண்ணெய் ஊற்றுதல்.
- ❖ பணியாரம், வளையல், பாகிலிட்டசோகி எனப் பலகாரங்கள் கொண்டுசெல்லல் (மாப்பிள்ளைவீட்டிற்கு)
- ❖ காணி, நகைகள் (ஆபரணம்) தருவாக பேசுதல்.
- ❖ சம்பந்தம் கலந்தபின்னர் மகிழ்ச்சியின் அடையாளமாகக் குரவை இடுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற நிகழ்வுகள்.
- ❖ பிறைபார்த்து, திருமணநாள் குறித்தல்.
- ❖ வெள்ளைப் புடவை விரிப்புவிரித்து மாப்பிள்ளையை அழைத்துவரல்.
- ❖ மாப்பிள்ளை சபைக்குச் ஸலாம் சொல்லல்.
- ❖ அடையாளம் போடுதல் (பெண்ணின் தகப்பனார் பரிசுப்பொருள் கொடுத்தல்)
- ❖ மாப்பிள்ளைகேட்டு மணம் பேசும் நிகழ்ச்சியில் துஆ செய்தல் (பிரார்தனை)
- ❖ மாப்பிள்ளையைத் இறுகப்பிடித்து, அணைத்து முஸாபகாசெய்தல் (கைலாகுசெய்தல்)
- ❖ திருமணவிருந்து கொடுத்தல்.
- ❖ மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்கு மருதோன்றி கொண்டுசெல்லல்.
- ❖ பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு மாற்று மருதோன்றி கொண்டுசெல்லல்.
- ❖ மருதோன்றி கொண்டுவருவதற்கு அடையாளமாகக் குரவை இடுதல், வந்தவர்களை அழைத்து மதிப்பளித்து பதிலுக்கு குரவையிடுதல்.
- ❖ காழி, மரைக்காமார், லெப்பையென எல்லோரும் வந்துகாவின் பதிதல் (திருமணத்தைப் பதிவுசெய்தல்)
- ❖ மணமகன் மஹர் கொடுத்தல் (பெண்ணுக்காக மணமகன் கொடுக்கும் கொடை)
- ❖ வொலிசொல்லல் (பெண்ணின் பொறுப்புதாரர் பெண்ணை மாப்பிள்ளைக்குப் பாரப்படுத்தி உறுதிமொழி அளித்தல்)
- ❖ திருமண ஒப்பந்தம் நடைபெறல்.
- ❖ பொல்லடி, வாள் வீச்சு என்பவற்றுடன் மாப்பிள்ளை அழைத்து வரப்படல்.
- ❖ பைத் என்னும் பாடலைப்பாடி மாப்பிள்ளையை அழைத்துவரல்.
- ❖ மாப்பிள்ளைக்கு குடைபிடித்தல்.
- ❖ விருத்தம் பாடுதல் (பெண் வீட்டுமுற்றத்தில்)

- மாப்பிள்ளைக்கு கால் கழுவுதல்.
- பெண்ணை, தகப்பனார் பெண்ணின் முன்நெற்றி முடியினைப் பிடித்துப் பொறுப்புக் கொடுத்தல்.

**இறப்புச் சடங்கு 21 – 28**

- பள்ளிவாசலுக்குச் செய்தி செல்லுதல்
- கப்று (அடக்குவதற்கான புதைகுழி) வெட்டுதல்
- மஞ்சு கூட்டுதல் (மையத்தை வைத்து மூடுவதற்காகப் பலகையால் செய்யப்படும் பெட்டி)
- சந்தூக்கில் வைத்து (மையத்தை தூக்கிச் செல்லும் பாடை) கொண்டு செல்லுதல்.
- கடல் நீரால் மையத்தைக் குளிப்பாட்டுதல்.
- பெண் மையத்தை பெண்கள் மாத்திரமே குளிப்பாட்டுதல்.
- வெள்ளைப் புடவையில் மையத்தைச் சுற்றுதல்.
- மையத்தின் கண்களுக்கு சுறுமா (கண்ணிமைக்கு இடும் மை) இடுதல்.
- பன்னீர் தெளித்தல்.
- அத்தர் (வாசனைத் திரவியம்) தெளித்தல்
- மையத்தைப் பின்தொடர்ந்து செல்லுதல்.
- மையத்ததைப் பின்தொடர்கையில் கலிமா (இஸ்லாமிய உறுதிமொழி) ஐக் கூறிச் செல்லல்.
- கப்புறுக்குள் வைத்து அடக்கம் செய்தல். (அடக்குவதற்கான புதைகுழி)
- மண்ணால் மூடி அடக்கியபின், அம் மணல் மேட்டின் மீது மீஸான் கட்டை நாட்டுதல்.
- தல்கீன் (மரணமடைந்தபின்னர் மையவாடியில் வந்திருப்போருக்கு செய்யப்படும் உபதேசம்)
- கத்தம் (மரணித்தவர்களுக்கு குர் ஆனை ஓதிவிருந்துக் கொடுத்தல்) கொடுத்தல்.
- இத்தா இருத்தல் (மரணித்தவருக்காய் மனைவி அனுபவிக்கும் துக்கம் நிறைந்த நாட்கள்)

**பிறப்புச் சடங்கு 31 – 34**

- பிள்ளை கிடைத்தமைக்காக பள்ளிவாசலுக்கு நிய்யத் (பாற்சோறு) சமைத்துக் கொடுக்கின்றமை.
- ஏழைகளுக்கு உணவளிகின்றமை.
- ரொட்டிசுட்டு, ஆலிமைக் (இஸ்லாமிய அறிஞர்) கொண்டு பாத்திஹா ஓதுதல்)
- அவுலியாக்களின் (இறைநேசகர்கள்) கபுறடிக்கு (அடக்கஸ்தலத்திற்கு)ரொட்டிகள் கொண்டுசென்று தலைமாட்டில் வைத்து றாத்தீபு (பிராத்தனை) செய்தல்.
- எண்ணெய் வைத்து, விளக்கேற்றி, அவ்வெண்ணெய்யினைக் கண்களில் பயபக்தியுடன் ஒற்றி, பிள்ளைக்கும் அதனை அப்பி பிரார்த்தனை செய்தல்
- காக்கைகளுக்கு ரொட்டித் துண்டுகளைப் போடுதல்.
- பெண்பிள்ளைகளுக்கு சுன்னத் (பெண் விருத்தசேதனம்) செய்தல்.
- தலைமயிரை மழித்து நீராட்டல்.
- அரைமுடி, சலங்கை போன்ற ஆபரணங்கள் அணிவித்தல்.
- பிறந்தபிள்ளைக்குச் சாணையைக் கூறையாகக் கொடுத்துச் சம்பந்தம் கலத்தல்.

- ❖ பிள்ளையின் தாய்மாமன் மாமநூல் போடுதல் (காவல் நூல்)
- ❖ காதுகுத்துக் கலியாணம் (காதுகுத்துச் சடங்கு) செய்தல்.
- ❖ காதுகுத்துக் கலியாணத்தில் பெண்கள் குரவை இடுதல்.
- ❖ காதுகுத்துச் சடங்கில் பாவாக்கள் (இஸ்லாமியபாடகர்கள்) பாடல்கள் பாடுதல்.
- ❖ ஆரத்தி எடுத்தல்.
- ❖ கண்திருஷ்டி கழித்தல்.

**நிறைவாக**

தோட்டுப்பாய் முத்தம்மா என்னும் நவீன காவியம் செய்னம்புவை முதல்நிலைப் பாத்திரமாகக் கொண்ட கதையம்சத்தோடு கிழக்கிலங்கை முஸ்லீம்களின் பேச்சுமொழி, பழமை, பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றைப் பதிவுசெய்யும் படைப்பாகவும் அமைந்திருக்கின்றது. கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம் மக்களிடையே குறித்த காலப்பகுதியில் வழக்கிலிருந்த வாழ்வியற் சடங்குகளான பிறப்புச் சடங்கு, ” ப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, மரணச் சடங்கு என்பவை பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளன. எனினும் இந்நவீன காவியத்தில் பதிவுபெற்ற பல சடங்குகள் இன்றைய காலத்தில் முற்றாக வழக்கொழிந்து போனவையாகக் காணப்படுகின்றன. நடைமுறையில் உள்ளவற்றையும், வழக்கொழிந்து போனவற்றையும் மேல்வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

**நடைமுறையில் உள்ளவை**

**பெரியபிள்ளைச் சடங்கு 43 – 46**

- ❖ பெரியபிள்ளையானதும் அக்கம்பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிவித்தல்.

**திருமணச் சடங்கு 52 – 56, 62 – 71**

- ❖ காணி, நகைகள் (ஆபரணம்) தருவாக பேசுதல்.
- ❖ பிறைபார்த்து, திருமணநாள் குறித்தல்.
- ❖ மாப்பிள்ளை சபைக்குச் ஸலாம் சொல்லல்.
- ❖ அடையாளம் போடுதல் (பெண்ணின் தகப்பனார் பரிசுப்பொருள் கொடுத்தல்)
- ❖ மாப்பிள்ளை கேட்டு மணம் பேசும் நிகழ்ச்சியில் துஆ செய்தல் (பிரார்தனை)
- ❖ மாப்பிள்ளையைத் இறுகப்பிடித்து, அணைத்து முஸாபகா செய்தல் (கைலாகு செய்தல்)
- ❖ திருமணவிருந்து கொடுத்தல்.
- ❖ மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்கு மருதோன்றி கொண்டு செல்லல்.
- ❖ காழி, மரைக்காமார், லெப்பையென எல்லோரும் வந்து காவின் பதிதல் (திருமணத்தைப் பதிவுசெய்தல்)
- ❖ மணமகன் மஹர் கொடுத்தல் (பெண்ணுக்காக மணமகன் கொடுக்கும் கொடை)
- ❖ வொலிசொல்லல் (பெண்ணின் பொறுப்புதாரர் பெண்ணை மாப்பிள்ளைக்கு பாரப்படுத்தி உறுதிமொழி அளித்தல்)
- ❖ திருமண ஒப்பந்தம் நடைபெறல்.
- ❖ பெண்ணை, தகப்பனார் பெண்ணின் முன்நெற்றி முடியினைப் பிடித்து பொறுப்புக் கொடுத்தல்.

**இறப்புச் சடங்கு 21 – 28**

- ❖ பள்ளிவாசலுக்குச் செய்தி செல்லுதல்
- ❖ கப்று (அடக்குவதற்கான புதைகுழி) வெட்டுதல்
- ❖ மஞ்சு கூட்டுதல் (மையத்தை வைத்து மூடுவதற்காகப் பலகையால் செய்யப்படும் பெட்டி)
- ❖ சந்தூக்கில் வைத்து (மையத்தை தூக்கிச் செல்லும் பாடை) கொண்டு செல்லுதல்.
- ❖ கடல் நீரால் மையத்தைக் குளிப்பாட்டுதல்.
- ❖ பெண் மையத்தைப் பெண்கள் மாத்திரமே குளிப்பாட்டுதல்.
- ❖ வெள்ளைப் புடவையில் மையத்தைச் சுற்றுதல்.
- ❖ மையத்தின் கண்களுக்குச் சுறுமா (கண்ணிமைக்கு இடும் மை) இடுதல்.
- ❖ பன்னீர் தெளித்தல்.
- ❖ அத்தர் (வாசனைத் திரவியம்) தெளித்தல்
- ❖ மையத்தைப் பின்தொடர்ந்து செல்லுதல்.
- ❖ கப்புறுக்குள் வைத்து அடக்கம் செய்தல். (அடக்குவதற்கான புதைகுழி)
- ❖ மண்ணால் மூடி அடக்கியபின், அம் மணல் மேட்டின் மீது மீஸான் கட்டை நாட்டுதல்.
- ❖ இத்தா இருத்தல் (மரணித்தவருக்காய் மணைவி அனுபவிக்கும் துக்கம் நிறைந்தநாட்கள்)

**பிறப்புச் சடங்கு 31 – 34**

- ❖ தலைமயிரைமழித்துநீராட்டல்.

**வழக்கிழந்து போனவை**

பெரியபிள்ளைச் சடங்கு 43 – 46

- ❖ பிட்டோடு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து கொடுத்தல்.
- ❖ நாட்டுக்கோழி முட்டையை உடைத்துக் குடிக்கக் கொடுத்தல்.
- ❖ பிட்டில் நல்லெண்ணெய் விட்டு முதுகு, இடுப்புப் பகுதிகளில் ஒத்தனம் இடுதல் (ஒத்தடம்)
- ❖ சம்பந்தக்காரர்கள் சாணக் கூறையை வழங்கிப் பெண்ணை உறுதிப்படுத்துதல்.
- ❖ மஞ்சள் அரைத்துஉடலெல்லாம் பூசுதல்.
- ❖ கவி படித்தல்.

**திருமணச் சடங்கு 52 – 56, 62 – 71**

- ❖ கலியாணத்திற்காக வீட்டுவளவினுள் இருக்கும் தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறித்து, எண்ணெய் ஊற்றுதல்.
- ❖ பணியாரம், வளையல், பாகிலிட்டசோகி எனப் பலகாரங்கள் கொண்டு செல்லல் (மாப்பிள்ளை வீட்டிற்கு)
- ❖ சம்பந்தம் கலந்தபின்னர் மகிழ்ச்சியின் அடையாளமாகக் குரவை இடுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற நிகழ்வுகள்.
- ❖ வெள்ளைப் புடவை விரிப்புவிரித்து மாப்பிள்ளையை அழைத்துவரல்.

- ❖ பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு மாற்று மருதோன்றி கொண்டு செல்லல்.
- ❖ மருதோன்றி கொண்டு வருவதற்கு அடையாளமாகக் குரவை இடுதல், வந்தவர்களை அழைத்து மதிப்பளித்து பதிலுக்கு குரவையிடுதல்.
- ❖ பொல்லடி, வாள் வீச்சு என்பவற்றுடன் மாப்பிள்ளை அழைத்துவரப்படல்.
- ❖ பைத் என்னும் பாடலைப்பாடி மாப்பிள்ளையை அழைத்துவரல்.
- ❖ மாப்பிள்ளைக்கு குடைபிடித்தல்.
- ❖ விருத்தம் பாடுதல் (பெண் வீட்டுமுற்றத்தில்)
- ❖ மாப்பிள்ளைக்குகால் கழுவுதல்.

**இறப்புச் சடங்கு 21 – 28**

- ❖ மையத்ததைப் பின்தொடர்கையில் கலிமா (இஸ்லாமிய உறுதிமொழி) ஐக் கூறிச் செல்லல்.
- ❖ தல்கீன் (மரணமடைந்த பின்னர் மையவாடியில் வந்திருப்போருக்குச் செய்யப்படும் உபதேசம்)
- ❖ கத்தம் (மரணித்தவர்களுக்கு குர் ஆனை ஓதிவிருந்துக் கொடுத்தல்) கொடுத்தல்.

**பிறப்புச் சடங்கு 31 – 34**

- ❖ பிள்ளை கிடைத்தமைக்காகப் பள்ளிவாசலுக்கு நிய்யத் (பாற்சோறு) சமைத்துக் கொடுக்கின்றமை.
- ❖ ஏழைகளுக்கு உணவளிகின்றமை.
- ❖ ரொட்டிசுட்டு, ஆலிமைக் (இஸ்லாமிய அறிஞர்) கொண்டு பாத்திஹா ஓதுதல்)
- ❖ அவுலியாக்களின் (இறைநேசகர்கள்) கபுறடிக்கு (அடக்கஸ்தலத்திற்கு)ரொட்டிகள் கொண்டுசென்று தலைமாட்டில் வைத்து றாத்தீபு (பிராத்தனை) செய்தல்.
- ❖ எண்ணெய் வைத்து, விளக்கேற்றி, அவ்வெண்ணெய்யினைக் கண்களில் பயபக்தியுடன் ஒற்றி, பிள்ளைக்கும் அதனை அப்பி பிரார்த்தனை செய்தல்
- ❖ காக்கைகளுக்கு ரொட்டித் துண்டுகளைப் போடுதல்.
- ❖ பெண்பிள்ளைகளுக்குச் சுன்னத் (பெண் விருத்தசேதனம்) செய்தல்.
- ❖ அரைமுடி, சலங்கை போன்ற ஆபரணங்கள் அணிவித்தல்.
- ❖ பிறந்தபிள்ளைக்குச் சாணையைக் கூறையாகக் கொடுத்து சம்பந்தம் கலத்தல்.
- ❖ பிள்ளையின் தாய்மாமன் மாமநூல் போடுதல் (காவல் நூல்)
- ❖ காதுகுத்துக் கலியாணம் (காதுகுத்துச் சடங்கு) செய்தல்.
- ❖ காதுகுத்துக் கலியாணத்தில் பெண்கள் குரவை இடுதல்.
- ❖ காதுகுத்துச் சடங்கில் பாவாக்கள் (இஸ்லாமியபாடகர்கள்) பாடல்கள் பாடுதல்.
- ❖ ஆரத்தி எடுத்தல்.
- ❖ கண்திருஷ்டி கழித்தல்.

ஆரம்பகாலத்தில் அரேபியாவிலிருந்து இலங்கை, இந்தியா முதலான நாடுகளில் முஸ்லீம்களின் பரவல் ஏற்பட்டது. இதனால் முஸ்லீம்கள் வேற்றுப் பண்பாட்டுச் சூழலில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதும், இஸ்லாமியப் பண்பாட்டிலிருந்த சடங்கு முறைகளில் பிற பண்பாட்டுச் சடங்கு முறைகளின் கலப்பு ஏற்பட்டது. இதனால் இந்த நடைமுறைகளையே இஸ்லாமியப் பண்பாட்டு வழிமுறைகளென பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்ததையும் காணலாம். இதில் துரதிஷ்டம் என்னவெனில் இஸ்லாமியப் பண்பாட்டு நடைமுறைகள் எவை?,

பிற பண்பாட்டு நடைமுறைகள் எவை எனப் பிரித்து நோக்கமுடியாத ஒரு நிலை இருந்தது. இந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்த போது, இலங்கையைப் பொறுத்தவரையில் மதம் சார்ந்த போதனைகளை வழங்குவதற்காக இஸ்லாமிய உயர் கல்வி கலாபீடங்கள், மத்ரஸாக்கள் உருவாகின. அவற்றில் பெருந்திரளானவர்கள் இணைந்து அல்குர்ஆன், அல்ஹாதீஸ் முதலானவற்றிலுள்ள தெளிவுகளைப் பெற்று வெளியேறினர்.

இவ்வாறு வெளியேறியவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள பண்பாட்டு ரீதியான அனாச்சாரங்களைத் தவிர்த்து இஸ்லாம் எளிமையான மார்க்கம். அது எளிமையே போற்றுகிறது என இஸ்லாம் கூறிய விதத்தில் பண்பாட்டு நடைமுறைகளை செய்யத் தொடங்கியதும் இஸ்லாமிய சமூகத்திற்கு அதைப் பின்பற்றுவது இலகுவாக இருந்ததனால், முன்பு இஸ்லாமிய நடைமுறையில் சடங்குகளில் கலந்திருந்த பொருமளவான சடங்கு முறைகள் இப்போது இல்லாமல் போயிருப்பதைக் காணலாம்.

குறித்த காலப்பகுதியில் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம் மக்களின் மத்தியிலிருந்த பண்பாட்டுக் கோலங்களை பதிவுசெய்ய வேண்டும் என்ற நோக்கத்தைக் கவிஞர் செய்னம்புவின் கதையினூடாக நிறைவேற்றியுள்ளார். இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஏற்பட்ட சமயம் பற்றிய விழிப்புணர்வும் தெளிவும் இன்று இந்நவீன காவியத்தில் கூறப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள் பல வழக்கொழிந்தமைக்கான காரணங்கள் எனலாம்.

**பயன்படுத்திய நூல்கள்**


1. கலித்தொகை, (1984), நச்சினார்க்கினியம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு
2. நுமான், எம், ஏ., (2000), நவீன காவியங்கள் மஹாகவியின் ஆறு காவியங்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை.
3. திருக்குறள், (1983), பரிமேலழகர் உரை, " ம்புகார் பிரசுரம், சென்னை.
4. பாறூக், (2011), தோட்டுப்பாய் மூத்தம்மா, பர்ஹாத் வெளியீடு, சாய்ந்தமருது.
5. புறநானூறு, (1935), உ. வே. சாமிநாதையர் பதிப்பு, லா. ஜர்னல் அச்சுக்கூடம், சென்னை.
6. முகம்மது உவைஸ், (1996), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி ஐஇ ஐஐ, மதுரைக்காமராஜர் பல்கலைக்கழகம்.